1969 மார்ச் 31]

அன்று கணக்கை முடித்துவிட்டனர். இரண்டாவதாகக் கட்டப்பட்ட தொகை 3–1–1969-ல் கிரெடிட் ஆகியிருக்கிறது. 18–11–1968-ல் கணக்குகள் முடிந்து விட்ட காரணத்தினால், அந்தக் கணக்கில் இந்தத் தொகை சேர்க்கப்பட வில்லை. இந்தத் தொகை அடுத்த ஆண்டு பட்ஜெட் மெமொராண்டத்தில் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

வினாக்கள் துணை வினாக்கள்முதலியவை பற்றிய புள்ளிவிவரம்.

Thiru K. VINAYAKAM : On a point of information, Sir. Today is the last day of our sitting for the Budget session. We are going to adjourn today. It is left to you, Sir, to prolong it, adjourn *sine die* or fix a date for the next meeting. The usual practice on the last day is that the Hon. Speaker will give a list of how many questions were raised, how many questions were disallowed, how many questions were answered, who is the person who has given notice of more questions, who is the person who has asked more supplementaries. It is the practice of the Hon. Speaker to enliven the House by giving the above information so as to enable us to take more interest in interpellations. For instance the late Sri Satyamurthi was more known as "Supplementary Murthy" because he was famous in putting supplementary questions. That will give pep to members to take more interest in the proceedings of the House. Will the Hon. Speaker be pleased to give us more information in that regard ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை முடிகின்ற நேரத்தில் இந்த விவரங்களைக் கொடுப்பதற்காக எழுதி வைத்திருக்கிறேன். அதற்குள் திரு. வினாயகத்திற்கு அவசரம் (**Thiru K. Vinayakam I am sorry.**) திரு. சத்திய மூர்த்தி அவர்களின் பெயர் திரு. வினாயகத்திற்கு வருமா என்பது சந்தேகத்திற்குரியது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

க்வாலிடி ரெஸ்டாரென்ட் கதவடைப்பு.

மாண்புமிகு திரு. பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். சென்னை மவுண்டு ரோடிலுள்ள க்வாலிடி ரெஸ்டாரெண்டை திடீரென்று "27–3–'69 முதல் கதவடைப்புச் செய்துவிட்டதால், அதனால் பாதிக்கப்பட்ட சுமார் 60 தொழிலாளர்கள் கதவடைப்பை எதிர்த்துப் போராடி வருவதைப்பற்றி விவாதிக்கச் சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியிருக்கிறார்.

கதவடைப்புகள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுப்பதை அனுமதிக்கக்கூடாது என்று பல முறை தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.